# கோவையில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

(நமது நிருபர்)

கோவை, மே. 27,

கோவை டவுன் ஹால் மைதானத்தில் 26-5-38 தேதி மாலை 6 மணிக்கு கோவை முனிசிபல் கௌன்சிலரும் நமதியக்கத் தோழருமான டாக்டர் டி. வி. பதி எம். டி. ஹெச். எஸ். அவர்கள் தலைமை வகித்தார். பொது ஜனங்கள் ஏராளமாக குழுமியிருந்தனர். சுயமரியாதை பாடப்பட்ட பின்னர் தலைவர் முகவுரையாக கூட்டத்தின் நோக்கத்தையும், ஹிந்தியை ஏன் நாம் எதிர்க்கிறோம் என்ற காரணத்தையும் எடுத்துக் கூறினார். தோழர்கள் கோவை எஸ் எ. மாணிக்கம் அவர்களும், ஜனாப் எ. எம். முஹமதயூசப், பண்டிட் மஹாபலராவ், ஜனாப் சி. யூசுப், ஜனாப் சையத் பாப்ஜான் ஆகியோர்கள் ஹிந்தியை தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக நுழைக்கப்படும் கனம் ஆச்சாரியாரின் துணிச்சலை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள்.

மற்றும் சென்னையில் ஹிந்திக்காக உண்ணாவிரதமிருக்கும் தோழர் கே. என். ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களை ஆதரித்தும், தோழர் காந்தியாரின் அறிக்கையையும், 'சுதேசமித்திரன்' உபதலையங்கத்தையும் வன்மையாக கண்டித்தும் பேசினார்கள். கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில் கொடுக்கப்பட்டது. கூட்டத்தின் இடை இடையே பொது மக்கள் ஆரவாரித்தார்கள். தலைவர் முடிவுரை கூறிய பின் வந்தனம் கூற "தமிழ் வாழ்க" "ஹிந்தி ஒழிக" என்ற பெரிய கரகோஷத்தினிடையே கூட்டம் இனிது கலைந்ததென தோழர் எஸ். ஜி. பரதம் காரியதரிசி ஹிந்தி எதிர்ப்புச் சங்கம் அறிவிக்கிறார்.

---

# 16-வது ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

சென்னை, மே. 28

30-5-38 திங்கட் கிழமை மாலை 5-மணிக்கு. சென்னை பார்க் டவுன் இராசப்ப செட்டி வீதியில் பத்து முறை சிறை சென்ற காங்கரஸ் வாதி சுவாமி சண்முகானந்தா அவர்கள் தலைமையில் ஹிந்தி ஒழிப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. டி. நாயகம், ஈழத்துச்சிவானந்த அடிகள், கே. எம். பாலசுப்பிரமணியம், சி. என். அண்ணாதுரை முதலியோர் ஹிந்தி எதிர்ப்புப்பிரசாரம் செய்வார்கள்.